விலை ரூபா 1-25

# ஈழநாடு

THE EELANADU

NATIONAL TAMIL DAILY

மலர் 26 சித்திரை 13 றஜப் 22 இதழ் 70
யாழ்ப்பாணம் புதன்கிழமை 25—4 84

தீவிரவாதிகளுடன் சந்திப்பு:

## கருத்து வெளியிட எம். ஜி. ஆர். மறுப்பு

## "நல்ல சூழ்நிலையை கெடுத்துவிடவேண்டாம்"



(சென்னை)

தமிழ்நாட்டில் உள்ள ஈழ விடுதலை இயக்கப் பிரதிநிதிகளுடன் நடத்தப்பட்ட இரகசிய பேச்சுக்கள் குறித்து கருத்து எதுவும் வெளியிட தமிழக முதலமைச்சர் திரு. எம். ஜி. ராமச்சந்திரன் நேற்று மறுத்துவிட்டார்.

தமிழக முதலமைச்சர் நேற்று முன்தினம் திரு. உமா மகேஸ்வரனையும், திரு. பிரபாகரனையும் தனித்தனியே சந்தித்து பேச்சுக்கள் நடத்தினார் இதன் பின்னர் வேறு இயக்கங்களின் பிரதிநிதிகளையும் தனித்தனியே சந்தித்து சுமார் ஆறு மணி நேரம் பேச்சு நடத்தினார்.

இச்சந்திப்பு மிகவும் இரகசியமான முறையில் முன்னர் வெளியிடப்படாத ஓர் குறிப்பிட்ட இடத்தில் நடைபெற்றது.

இச்சந்திப்புகள் குறித்து தமிழக முதல்வரை நேற்று சென்னையில், பல பத்திரிகை

(8-ம் பக்கம் பார்க்க)

# வடபகுதி கடலில் கரைஒதுங்கியசடலங்கள்

## யாழ். ஆஸ்பத்திரியில் ஒப்படைக்கப்பட்டன

[புலோலி, மாவிட்டபுரம் நிருபர்கள்]

**வடபகுதிக் கடற்கரையில் ஒதுங்கிய சடலங்கள்; வடகடல் கண்காணிப்பு வலயத்தில் கடற்படையினரின் துப்பாக்கிச்சூட்டுக்கு இலக்காகி, படகிலிருந்து காணாமறபோன பதின்மூவருடையதா?**

வடபகுதி கடல் கண்காணிப்பு வலயத்தில் கடந்த சனிக்கிழமை இரவு படகொன்று கடற்படையினரின் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி பலர் கடலில் மூழ்கியிருக்கலாம் என்று அஞ்சப்பட்டது.

கடற்படையினரின் உத்தரவை மீறியதாக குறிப்பிட்ட இயந்திரப்படகுமீது துப்பாக்கிப் பிரயோகம் செய்யப்பட்டதாகவும், ஐவர் கைதுசெய்யப்பட்டனர் என்றும் ஒருவர் இறந்த நிலைக் காணப்பட்டார் என்றும் மிகுதி பதின்மூன்று பேரும் கடலில் மூழ்கியிருக்கலாம் என்றும் தெரிவிக்கப்பட்டது.

### முதலில் ஒதுங்கிய 6 சடலங்கள்

நேற்று பொலிகண்டி கடற்கரையில் ஓர் இளைஞனின் சடலம் கரை ஒதுங்கியிருந்தது இதே போல, பருத்தித்துறை வாடிவீட்டுக்கு முன்பாகவும், பருத்தித்துறை பழைய தபாலகத்துக்கு முன்பாகவும் கரையோரமாக இரு சடலங்கள் ஒதுங்கியிருந்தன. இதேமாதிரி வேறு சில சடலங்கள் மயிலிட்டியிலும் கரை ஒதுங்கியதாகத் தெரிவிக்கப்பட்டது.

நேற்றிரவு கரை ஒதுங்கிய ஆறு சடலங்கள் ஆயுதப் படையினரால் கொண்டுவரப்பட்டு யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரியில் ஒப்படைக்கப்பட்டன. இச் சடலங்கள் அடையாளம் காண்பதற்காக பிரேதச்சாலையில் வைக்கப் பட்டுள்ளன சில சடலங்களில் உடைகள் எதுவும் காணப்படவில்லை என்று தெரிவிக்கப்பட்டது.

இச் செய்தி அச்சுக்குப்போகும்போது கிடைக்கப்பெற்ற உறுதிப்படுத்தப்படாத தகவல்களின்படி, மேற்கொண்டு சில சடலங்களும் கரைஒதுங்கியதாகத் தெரியவருகிறது.

## வடக்கு, கிழக்கில் இன்று மழை

(கொழும்பு)

கொழும்பில் கடந்த சில தினங்களாகப் பலத்த மழை பெய்துகொண்டிருக்கிறது.

இன்று வடக்கு, கிழக்கில் பலத்த மழை பெய்யுமென்று வானிலை அவதான நிலையம் நேற்று அறிவித்தது.

## நேற்றிரவுச் சம்பவம்

(யாழ்ப்பாணம்)

நேற்றிரவு பத்து மணியளவில் ஓர் இளைஞரின் சடலம் ஆயுதப்படையினரால் யாழ். ஆஸ்பத்திரியில் ஒப்படைக்கப்பட்டது. ஊரடங்குச் சட்ட நேரத்தை மீறியதால் இந்த இளைஞர் ஒருநகரில் சுடப்பட்டதாகத் தெரியவருகிறது.

## 7 இணைப்பு அதிகாரிகள்

(கொழும்பு)

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் ஏழு உயர் இராணுவ அதிகாரிகள் இணைப்பு அதிகாரிகளாக ஜனாதிபதியினால் நியமிக்கப்பட்டுள்ளனர்.

யாழ்ப்பாணம்—கிளிநொச்சி மாவட்டங்களின் இணைப்பு அதிகாரியாக பிரிகேடியர் என். செனிவரத்ன நியமனம் பெற்றுள்ளார்.

இம்மாதம் பதினெட்டாம் திகதி முதல் இந்த நியமனங்கள் அமுலுக்குவரும். நேற்று இவர்களுடன் பிரதம இணைப்பு அதிகாரி ஒருவரும் நியமிக்கப்பட்டுள்ளார் என்று குறிப்பொன்று தெரிவித்தது.

பார்சல் குண்டு சம்பவம்:

## கைதான நால்வரும் இன்று ஆஜர்

[கொழும்பு]

கொழும்பு புஞ்சி பொரளை பார்சல் வெடிகுண்டுச் சம்பவம் தொடர்பாகக் கைதான நால்வரும் இன்று கொழும்பு நீதிமன்றத்தில் ஆஜர்செய்யப்படுவார்கள்.

(8ம் பக்கம் பார்க்க)

ஜூலை சம்பவத்தினால் இடம்பெயர்ந்த

## அரசாங்க, கூட்டுத்தாபன ஊழியர்கள் 30க்கு முன்னர் திரும்பவேண்டும்

(கொழும்பு)

"கடந்த ஜூலைக் கலவரங்களினால் பாதிக்கப்பட்டு இடம் பெயர்ந்த அரச, கூட்டுத்தாபன ஊழியர்கள் அனைவரும் இம்மாதம் 30ம் திகதிக்கு முன்னர் வேலைக்கு திரும்ப வேண்டும்" என்று பொதுநிர்வாக அமைச்சின் செயலாளர் நேற்று விடுத்துள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

குறிக்கப்பட்ட திகதிக்கு வேலைக்கு திரும்பாதவர்கள் பதவியை இழக்க வேண்டிவரும் என்றும் அவ்வறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்தப் பணிப்புரை கல்வி அமைச்சின் கீழ் பணியாற்றும் ஊழியர்களுக்கு இல்லை என்றும் தெரிவிக்கப்பட்டது.

## யாழ் ஐ. வி. சங்கம் புத்துயிர்பெறுகிறது

(யாழ்ப்பாணம்)

"யாழ்ப்பாணத்தில் ஏப்ரல் 9ம் தேதி நடந்த அசம்பவித்தின்போது எரிக்கப்பட்ட யாழ் ஐக்கிய வியாபார சங்கக் கட்டடத்தை மக்களின் ஆதரவோடும், ஊழியரின் ஒத்துழைப்போடும் மீண்டும் நல்லமுறையில் கட்டியெழுப்பி, இறந்த சேவையாற்றுவோம்."

யாழ்ப்பாணம் ஐக்கிய வியாபார சங்க நிர்வாக இயக்குநர் திரு எஸ் சிவஞானம் நேற்று மேற்கண்டவாறு தெரிவித்தார்.

எரிந்து விழுந்த மாடிக் கட்டடத்தை மீண்டும் கட்டி எழுப்புவதற்கான வேலை துரிதமாக நடைபெறுகிறது மின்சார இணைப்பு வேலைகளும், நடைபெறுகிறது.

வாடிக்கையாளர்களுக்கு வழக்கம்போல், நேற்று முன்தினம் தொடக்கம் தேவையான பொருட்கள் விற்பனை செய்யப்பட்டு வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

சேர்விஸ்நிலையம் ஜவுளி பகுதி, பாதணிப் பகுதி தளர்ந்த மற்றும் சகல பகுதி

(8-ம் பக்கம் பார்க்க)

## பிரயாணிகள் சோதனை

(யாழ்ப்பாணம்)

தீவுப்பகுதிக்குச் சென்ற பஸ்கள் நேற்றுக்காலை பண்ணைக்கு அருகேவைத்துச் சோதனையிடப்பட்டன.

பிரயாணிகளிடம் அடையாள அட்டை காட்டுமாறு கேட்கப்பட்டது.

தேசிய அடையாள அட்டை கொண்டிராத ஏராளமானோர் அழைத்துச் செல்லப்பட்டு விசாரணைக்குட்படுத்தப்பட்டபின்னர் செல்ல அனுமதிக்கப்பட்டனர். (ஈ)

## 152 பேர் புகார்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் நடந்த அசம்பாவிதங்கள் தொடர்பாக நேற்றுவரை 152 பேர் யாழ் பொலிஸ் நிலையத்தில் புகார்செய்துள்ளனர்

இறந்தவர்கள், காயமடைந்தவர்கள், காணாமற்போனவர்கள் தொடர்பாகவும், வீடுகள், வர்த்தக நிலையங்கள், வாகனங்கள் சேதமடைந்தது தொடர்பாகவும் புகார்கள் செய்யப்பட்டுள்ளன. (ஈ)

## நலந்தானா?

இறைவன் அருளால்
நீங்கள் இங்கு நலந்தானா

என்று அறியத் துடித்துக்கொண்டிருக்கும் உங்கள் அன்பிற்குரியவர்களுடன் நீங்கள் அதிவிரைவில் அளவளாவி உறவாட எம்மால் இயன்றளவு உதவும்வகையில்

எங்கள் வெளிநாட்டுத் தொலைபேசி அழைப்புக் கட்டணங்களில்

முதல் மூன்று நிமிட அழைப்பு ஒன்றிற்கு

ரூபா 15/- விகிதம் குறைத்திருக்கிறோம்

பிறபட்டணங்களிலும் கணிசமான குறைப்புச்செய்திருக்கின்றோம்.

விரைந்து வந்து அழைப்புப் பெற்று ஆறுதல் பெறுங்கள்!

## குளோபல்

கொம்யூனிக்கேஷன்ஸ் லிமிட்டெட்

127, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம்.

ரெலிபோன்: 23812 23249, 23016
ரெலக்ஸ்: 22119—GLOBAL CE

(1990)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வரி விளம்பரம்

## விற்பனைக்கு

1½ பரப்புக் காணி யாழ் இந்து மகளிர் கல்லூரி புதிய பிரதக் கட்டமைக்களுகில் விற்பனைக்குண்டு 93/25 இந்து மகளிர் ஒழுங்கை சுந்தர்மடம் யாழ்ப்பாணம். 1943

புன்னாலைக்கட்டுவன் வடக்கில் ஐயனார் கோவிலுக்கு அருகாமையிலும், பாடசாலைக்குக் கிழக்குப் புறமாகவும் பிரதான வீதியில் இருந்து 50யார் தூரத்தில் 7பரப்புக்காணி விற்பனைக்குண்டு. பரராஜசேகரன் செகராஜசேகரன் ஒழுக்கல் கோவிலடி நவாலி, வடக்கு (மானிப்பாய் பொதுச்சந்தைக்கு1மைல் தூரம்) 1948

Bairaha Farms Hisex வெள்ளை, பிறவுன் ஒருநாள், ஒருவார, ஒருமாதப் பேட்டுக் குஞ்சுகள் விற்பனைக்குண்டு. சற்குணராசா பிறதர்ஸ் பிரம்படி, கொக்குவில். 1987

A.I R Conditioner 1½ Tons (American) G G தம்பையா, 4ம் கட்டை பருத்தித் துறை வீதி, கோப்பாய் 1982

H·100 S Honda மோட்டார் சைக்கிள் விற்பனைக்குண்டு. ரவிச்சந்திரன் 808, பருத்தித்துறை வீதி, நல்லூர் யாழ்ப்பாணம். 1988

எமது மர அரிவு ஆலையில் சிவிம் பலகை, மாம் பலகை 5''—12'' வரை சப்பும் பலகை 5''—12'' வரை வீட்டுத் தளபாடங்கள் சில்லறையாகவும். மொத்தமாகவும் விற்பனைக்குண்டு. ''கிருஷ்ணுஸ்'' பருத்தித்துறை வீதி, இருபாலை, கோப்பாய், 1920

இறைச்சி கோழிகளும் முட்டைகளும் தொகையாகவும், சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம். அண்ணா பாம் (இலை) செம்மாதெரு, யாழ்ப்பாணம். 1925

கமிடிட ஒப்பந்தகாரர்களுக்கும் புதிய மனை கோலுபவர்களுக்கும் உங்களுக்குத் தேவையான கட்டிடத்திற்கு தேவைப்படும் மரச் சாமான்கள் யாவற்றுக்கும் பிரத்தியேகமானவை ஆக சகாய விலைக்கு தேவைப்படின் 30-ம் திகதி வரையும் வந்து பெற்றுக்கொள்ளலாம். அல்வாய் முத்துமாரி அம்மன் கோவில் தெற்கு வீதியிலுள்ள வீட்டில் பார்வையிடலாம். மு. முத்தையா, அம்மன் தெற்கு வீதி, அல்வாய். 1963

## தேவை

ஞேசுன் கத்தோலிக்க பரதவ ஆணுக்கு மணமகள் தேவை. (வயது 30) யாழ்நகரில் சொந்த வர்த்தகம் செய்யும் மணமகனுக்கு, 23,25 வயதுக்குட்பட்ட பெண்தேவை. கடிதமூலம் விண்ணப்பிக்கவும். விளம்பர இல 1977 மே/பா சமநாடு, யாழ்ப்பாணம் 1977

மரக்கடைச்சக் வேலை தெரிந்த ஆண்டைக்தேவை. நேரில் வரவும். 162 A.V ரோட் (தவசிக்கடைச் சந்தி) அரியாலை, யாழ்ப்பாணம். 1980

கேற் கிறில் செய்வதில் திறமைவான வெல்டரும் உதவியாளரும் தேவை. 185/1 துர்கா வெங்டேஸ் கஸ்தூரியார் ரோட் யாழ்ப்பாணம் 1978

பிணைப்பணம் செலுத்தக் கூடிய யுவதி காசாளராக கடமையாற்றுவதற்கு தேவை. மாநகரசபைஎல்லைக்குள் விரும்பத்தக்கது. அத்துடன் நபர் சில வேலைவழங்குவதற்கும் யுவதிகள் தேவை. தாஸ் ஸ்ருடியோ 9, 8, நவீன சந்தை யாழ்ப்பாணம். போன் 23858 1984

## காணவில்லை

சண்முகம்பிள்ளை நல்லநாதன் ஆகிய எனது அடையாள அட்டை தவறிவிட்டது கண்டெடுத்தவர் இவ்விலாசத்திற்கு ஒப்படைக்கவும். ச. நல்லநாதன். 107/1, கொழும்புத்துறை ரோட், கொழும்புத் துறை. 1979

## குத்தகைக்கு

யாழ்ப்பாணத்தில் முன்னேற்றமான வியாபாரம் நடக்கும் இடத்தில் கடை குத்தகைக்குக் கிடைக்கும். விபரங்களுக்கு! 104/1, அத்தியடி குறுக்கு வீதி, பிள்ளையார் கோவில் முன்பாக, யாழ்ப்பாணம். 1986

யாழ்ப்பாணம்
பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் (வரையறுக்கப்பட்டது)

### வெற்றுச்சாக்கு கேள்வி அறிவித்தல்

எமது சங்கத்தில் 6000 வெற்றுச்சாக்குகள் கேள்வி மூலம் விற்பனைக்குண்டு. முடிவுத்திகதி 30-4-'84.

பதில்
பொதுமுகாமையாளர்
127, கே. கே. எஸ். வீதி,
யாழ்ப்பாணம்,
7-4-'84. 1981

## அன்பளிப்பு

(பண்டத்தரிப்பு)

சேந்தாங்குளத்தில் குடியேறியுள்ள அகதிகள் குடும்பங்களுக்கு யாழ். மறை மாவட்ட கிறிஸ்தவ தொழிலாளர் இயக்கம் சமையல் உபகரணங்களை அன்பளிப்பாக வழங்கியுள்ளது.

இயக்கத்தின் தலைவரும், பாடசாலை அதிபருமான திரு. எஸ். லோறன்ஸ் திரு. வி. ஜ. ஜோ. புவனேஸ்வரன் ஆகியோர் இயக்கத்தின் சார்பில் இந்த சமையல் உபகரணங்களை அகதிகள் குடும்பங்களிடம் நேரடியாகக் கையளித்தனர். கிறிஸ்தவ தொழிலாளர் இயக்கத் தலைமைப் பீடத்தைச் சேர்ந்த உபதலைவர் திரு ஏ. ஜெகதாசனும் இவ்வைபவத்தில் சமுகமளித்திருந்தனர்.

### யாழ்ப்பாணம் மாவட்ட நீதிமன்றத்தில் பின்னுறுதிக்கட்டளை பற்றிய அறிவித்தல்

காலஞ்சென்ற தம்பி ஐயா முகுந்தகுமார், இல. 14, ஐயனார்கோவில் வீதி, யாழ்ப்பாணம் என்பவரின் மரணசாதனமில்லா சொத்து விடயத்தில் மரணமெய்தியவர்

இல. 8774
மரணசாதன
நியமமதிக்கல்.

தம்பிஐயா கைம்பெண் திருப்பதியம்மா, இல 14, ஐயனார் கோவில் வீதி, யாழ்ப்பாணம்.

மனுதார்

மேலேயுள்ள இலக்கம் கொண்ட மரணசாதன வழக்கு மேலே பெயர் குறிப்பிட்ட இறந்துபோனவரின் மரணச்சொத்தை நிர்வகிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டு அதில் அதற்கிணங்க பின்னுறுதிக்கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

அக்கறையுள்ள ஆள் எவருக்கும் 1984-ம் ஆண்டு பங்குனி மாதம் 30-ம் நாளன்று முற்பகல் 10 மணிக்கு இந்நீதிமன்றத்தின் முன்னர் தோன்றி அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக்கட்டளை ஏன் முற்றுனதாக்கப்படலாகாதென்பதற்குக் காரணங்காட்டுமாறு இத்தால் தேவைப்படுத்தப்படுகின்றீர்.

நீதிமன்றக்கட்டளைப்படி
(ஒப்பம்)
கு. குலசிங்கம்
பதிவாளர்

1984 தை மாதம் 20-ம் திகதி. காரணங்காட்டும் தேதி 1984-6-1-ந் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது.

(ஒப்பம்)
பதிவாளர்

வரைவு:
இ.சிவசுப்பிரமணியம்
மனுதாரின் சட்டத்தரணி
1960

## யாழ். நகரில் தீயணைக்கும்படை அமைக்க நிதி சேகரிக்கப்படும்

(யாழ்ப்பாணம்)

யாழ். நகரில் தீயணைக்கும் படையொன்றை நிறுவுவதற்கு நிதிசேர்ப்பதற்கான ஆலோசனைக்கூட்டமொன்று இம்மாதம் 27ம் திகதி யாழ். மாநகர சபை செயற்குழு அறையில் ஆணையாளர் திரு சி. வி. கே. சிவஞானம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இக்கூட்டத்தில் கலந்து கொள்ளுமாறு தொழிலதிபர்கள், வர்த்தகர்கள் ஆகியோர் அழைக்கப்பட்டுள்ளனர்.

இருதினங்களுக்குமுன் யாழ். மாநகரசபை உத்தியோகத்தர்கள் கூட்டமொன்று நடைபெற்றது.

இக்கூட்டத்தில் நிதிசேர்ப்பதற்காக உத்தியோகத்தர்களிடையே நான்கு குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன.

இக்குழுவினர் மேமாதம் 1ம் திகதி முதல் வர்த்தக நிலையங்களுக்குச்சென்று நிதிசேகரிப்பார்கள்.

தீயணைக்கும்படை அமைப்பதற்கான நிதியை பொதுமக்கள் நேரிலும் கையளித்துப் பற்றுச்சீட்டுப் பெற்றுக்கொள்ளலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது. (ஈ)

## ப. நோ. கூ. சங்கத் தலைவர் ராஜினமா

(பண்டத்தரிப்பு)

பண்டத்தரிப்பு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தலைவர் திரு வி சேனாதிராசா தமது பதவியிலிருந்து இராஜினாமாச் செய்துள்ளார்.

குளியல் அறை தளக்கற்கள் அத்தோடு தளத்திற்கு மாபிள் கற்கள் பதிப்பதில் பல வருடகாலம் அனுபவம் பெற்ற ஒரே ஸ்தாபனம்.
ஓடர்கள் கொழும்பிலுள்ள பிரபல்யமான கம்பனியின் தொழிலாளர்கள், தொழில் நுட்பவியலாளர், மேற்பார்வையுடன் குறித்த தவணைக்குள் செய்து கொடுக்கப்படும்.
Gobi Terrazzo & Tile Works
432 (814) ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
தலைமை அலுவலகம்:
820/1, மருதானை வீதி, கொழும்பு.
(1976)

மாணவ மாணவிகளே
G.C.E. O/L (டிசம்பர் 84)
புதிய பிரிவுகள் ஆரம்பமாகின்றன
● பகல்நேர பிரிவுகள் ●
ஆரம்பம்: 30-4-84 காலை 8-30
● வார இறுதிப் பிரிவுகள் ●
ஆரம்பம்: 28-4-84 காலை 9-00
கட்டணம் சகல பாடங்களுக்கும்
40/- மட்டுமே
G.C.E. A/L 85/86
● கலை, வர்த்தக பிரிவுகள் ●
ஆரம்பம்: 28-4-84 காலை 9-00
4 பாடக் கட்டணம்
40/- மட்டுமே
● விஞ்ஞான பிரிவுகள் ●
ஆரம்பம்: 28-4-84 காலை 9-00
4 பாடக் கட்டணம்
50/- மட்டுமே
குறிப்பு: ஈழத்தின் தலைசிறந்த பட்டதாரி விரிவுரையாளர்களையும் (நிரந்தரமான) ஆய்வுகூட, நூல்நிலைய வசதிகளையும் உள்ளடக்கிய ஒரே ஸ்தாபனம்.
விபரங்களுக்கு:
Financial Association
402 1/2, K.K.S. ROAD, (கொக்குவில் சந்தி) JAFFNA.

## அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பிதழ்



மாதகல் திருமதி சின்னத்துரை திருஞானம்பிகை அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகளும், வீட்டுக் கிருத்தியமும், அன்னாரின் பெயரில் மதிய போஜனமும் 27-4-84ல் எமது இல்லத்தில் நடைபெறும். இவற்றில் கலந்து சிறப்பிக்குமாறு வேண்டுவதுடன் அன்னாரது மரணக் கிரியைகளில் பங்குபற்றியோர்க்கும், அனுதாபச்செய்திகளை அனுப்பியவர்களுக்கும் நன்றியறிதலையும் தெரிவிக்கின்றோம்.

கணவர்: திரு. செ. சின்னத்துரை
பிள்ளைகள்: திரு. சி. ஞானலிங்கநாதன்.
திரு சித்தலிங்கநாதன். செல்வி கலா சின்னத்துரை,
திரு. சி. யோகலிங்கநாதன்.
பிரதானவீதி, மாதகல். (1975)

சினி வீடியோ (தனி) லிமிட்
சினி வீடியோ ஸ்தாபனத்தார் தங்கள் யாழ்ப்பாணக் கிளையின் வழமையான சேவையை
23—4—84 திங்கட்கிழமை ஆரம்பித்திருக்கிறார்கள்
என்பதை வீடியோ கிளப் உரிமையாளர்களுக்கும், அங்கத்தவர்களுக்கும், ஆதரவாளர்களுக்கும் மகிழ்ச்சியுடன் அறியத்தருகிறார்கள்.
சினி வீடியோ [தனி] லிமிட்.
தலைமையகம்:
256 1/2, காலி வீதி,
கொழும்பு 6.
யாழ் கிளை:
253 1/1, ஸ்டான்லி வீதி,
(ஸ்ரீதர்தியேட்டருக்கு அருகாமையில்)
யாழ்ப்பாணம்.
(1969)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை தமிழர் மீது வன்முறைகள்

# சர்வதேச நீதிமன்றம் விசாரிக்க வேண்டும்!

## தமிழக மகாநாட்டில் பிரிட்டிஷ் பத்திரிகையாளர் செல்போர்ன்

சென்னை, ஏப்ரல். 24

"இலங்கையில் கடந்த ஆண்டு ஜூலைக் கலவரங்களில் தமிழர்கள் மீது நடத்தப்பட்ட வன்முறைகள்பற்றி விசாரிக்க இலங்கை அரசாங்கம் தவறிவிட்டது. எனவே சர்வதேச நீதிமன்றமொன்று அமைக்கப்பட்டு அவ்வன்முறைகள்பற்றி ஆராய்ந்து இலங்கை தமிழர்களுக்கு நிவாரணம் வழங்கப்பட வேண்டும்" என்று பிரபல பிரிட்டிஷ் பத்திரிகையாளர் திரு. டேவிட் செல்போர்ன் கூறியுள்ளார்.

தமிழ்நாடு சென்னையில் கடந்த இருதினங்களாக இலங்கைத் தமிழர் மனித உரிமைகள் மீறல்குறித்து மாநாடொன்று நடத்தப்பட்டது. உலக தமிழ் இளைஞர் பேரவை இம்மாநாட்டை ஏற்பாடு செய்திருந்தது. தமிழக சட்டசபை சபாநாயகர் திரு. ராஜாராம் இதனை ஆரம்பித்துவைத்தார்.

பத்திரிகையாளர் செல்போர்ன் இலங்கைத் தமிழர்கள் மீதான இலங்கை அரசின் அடக்குமுறைகள் பற்றிக்குறிப்பிட்டார். "சர்வதேச நீதிமன்றமொன்றில் இலங்கைத் தமிழர்கள் மீதான அநீதிகள் குறித்து விசாரணை செய்யப்படவேண்டும். இலங்கை அரசாங்கம் கடந்த ஆண்டு இலங்கைத்தமிழர்கள் பலர் கொல்லப்பட்டது, அவர்களது உடமைகள் சேதமாக்கப்பட்டது, என்பன குறித்து விசாரணைகளை நடத்தத்தவறியுள்ளது" என்று அவர் மேலும்தெரிவித்தார். இந்த பிரிட்டிஷ் பத்திரிகையாளர் கலவரங்களுக்கு முன்னர் இலங்கையில் இருந்தவர். இவர் இலங்கை அரசுக்கு எதிரான கருத்துக்கள் வெளியிட்டதை அடுத்து அங்கிருந்தும் வெளியேற்றப்பட்டார் என்பது குறிப்பிடத்தக்கது.

இம்மாநாட்டுக்குத் தலைமைவகித்த தமிழக சட்டப்பேரவை சபாநாயகர் திரு. ராஜாராம் பேசுகையில், இலங்கை அரசாங்கம் அங்குள்ள தமிழர்கள் மீது எடுக்கும் நடவடிக்கைகளைக் கண்டித்தார். அத்துடன் ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் இலங்கை அரசமீது எடுக்கப்பட வேண்டும் எனவும் அவர் கேட்டுக்கொண்டார்.

இவ்விசேட மாநாட்டில் தமிழக சட்டசபை பிரமுகர்கள், அரசியல்கட்சி உறுப்பினர்கள் உட்பட இலங்கைத்தமிழ் அரசியல் வாதிகளும் கலந்துகொண்டனர். (தி)

## சீனாவில் அமெரிக்க ஜனாதிபதி

# ரீகனும், மனைவியும் உறங்க வேதாளவடிவில் கட்டில்!

ஹொனலுலு, ஏப். 24

அமெரிக்க ஜனாதிபதி றொனல்ட் ரீகனும், அவரது பாரியார் நான்ஸியும் சீனாவுக்கான உத்தியோகபூர்வ பயணத்தை ஆரம்பித்துள்ளனர்.

பசுபிக் வழியாக இவர்கள் பீகிங் செல்கின்றனர். ஹவாய்த்தீவின் கொனலுலு நகரில் இவர்கள் தரித்துச்செல்லுகிறனர்.

சீனாவில் அமெரிக்க ஜனாதிபதி தம்பதிகளுக்கு பெரும் வரவேற்புக் காத்திருக்கிறது. இவர்கள் நாளை வியாழக்கிழமை பீகிங் சென்றடைவார்கள். அங்குள்ள விசேட அரண்மனையொன்றில் தங்குவார்கள்.

இவ் அரண்மனையில் இவர்கள் தங்கவுள்ள படுக்கையறையில் புராதன சீன சிற்பவேலை மரபுகளுக்கமைய வேதாளத்தின் வடிவில் கட்டிலொன்று இவர்கள் உறங்குவதற்கென

(7-ம் பக்கம் பார்க்க)

## கோவில் உடமைகளில்

# பெரும் மோசடி!

## நெடுமாறன் குற்றச்சாட்டு!!

(சென்னை)

கோவில் நகைகள் உருக்கப்படுகின்றன. கோவில்களின் பேரில் ஏர்கண்டிசன்கார் வாங்கப்படுகின்றன. என்னும் குற்றச்சாட்டுக்களை நெடுமாறன் தமிழ்நாடுசட்டசபையில்வெளியிட்டார். நெடுமாறனின் குற்றச் சாட்டுகளுக்குப்பதிலளித்த அமைச்சர் வீரப்பன் ஆலய நகைகளை உருக்கக்கூடாது என்ற உத்தரவொன்று இருப்பதைச் சுட்டிக்காட்டியபோதும்

(7ம் பக்கம் பார்க்க)

## தடைச்சட்டம் இருந்தபோதிலும் சிறுவர் தொழில் புரிவதை

# தடுப்பது கஷ்டம்!

## இந்திய தொழில் அமைச்சு தகவல்

புதுடில்லி, ஏப். 24

சிறுவர்கள் தொழிலில் ஈடுபடுவது தடைசெய்யப்பட்டிருக்கின்றபோதிலும், அவர்களை அப்படி ஈடுபடுவதிலிருந்தும் தடுக்க முடியாதுள்ளது என்று இந்திய தொழிலமைச்சு கருதுகின்றது.

இந்தியாவில் பல மக்கள் வறுமைக் கோட்டுக்குக் கீழே வாழ்ந்துவருகின்றனர். இதனால் சிறுவர்கள் பெருமளவில் மிகவும் குறைவான சம்பளத்தில் வேலைகளை ஏற்க வேண்டியுள்ளது. எனவே அவர்கள் போஷாக்கின்மை, கல்வியறிவின்மை ஆகியனவற்றாலும், சுகாதார வசதிகளின்மையாலும் பாதிப்படைகின்றனர்.

இது பற்றி இந்தியதொழில் அமைச்சு ஆராய்ந்தது. அப்போதே சிறுவர்கள் வேலைசெய்வதை தடுக்கமுடியாதது என்று அறியப்பட்டது.

சிறுவர்கள் தொழில் பார்ப்பதை தடுக்கமுடியாத பட்சத்தில் அவர்களுக்கு அவர்களின் உழைப்புடனேயே சுகாதார வசதி, போஷாக்கு உணவு, கல்விவசதி ஆகியனவற்றை வழங்க வேண்டுமெனவும் ஆலோசிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை தொடர்ந்து சிறுவர்கள் தொழில் பார்ப்பது இந்தியாவில் தடைசெய்யப்பட்டே இருக்கும். சிறுவர்கள் மூலமாக தொழில் லாபம் பெறும் தொழிலதிபர்கள் தண்டிக்கப்படுவார்கள். சிறுவர்களை தொழில் பார்ப்பதிலிருந்தும் தடுப்பது பற்றி ஆராயவிசேட [illegible] ள்ளது. (தி)


மிளகாய் இலைச் சுருளைத் தடுதது அதிக விளைச்சலைப் பெறுங்கள்

BASF

குமுலுஸ் எஸ்

நீரில் கரையக் கூடிய 80% கெந்தகம்

- நீரில் கலந்தவுடன் பால் நிறமாக மாறுகிறது.
- மிளகாய் இலைச் சுருளைத் தோற்றுவிக்கும் மைட்களை அழித்தொழிக்கிறது.
- மரக்கறி பயிர் வகைகளில் 'காளான்' தாக்கத்தைக் கட்டுப்படுத்துகிறது

இது ஒரு "மேற்கு ஜெர்மனி 'BASF'" தயாரிப்பாகும்.




குமுலுஸ் எஸ்

500 கிராம் ரூபா 16/50

கிடைக்குமிடம்: சகல விவசாய இரசாயனப் பொருள் விற்பனையாளரிடமும்

Metropolitan

மக்வுட்ஸ் ஸ்தாபனம்

2, ஞானர்த்தபிரதீபமாவத்தை, த.பெ.இல. (முன்னாள் மருதானைரோட்) கொழும்பு 8.

தொலை பேசி: 5979659






அருந்துங்கள் தெம்பூட்டும் மதுரமான

ஒரேஞ் பார்லி நெக்டோ

தரமுயர்ந்த இரு யானைமார்க் குளிர் பானங்கள்

வ. மா. விலை 2/15

எலிஃபன்ட் ஹவுஸ்


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# காணாமற் போனவர்கள்

அச்சுவேலியைச் சேர்ந்த ரி. சுரேஷ்குமார் என்பவரைக் காணவில்லை என்று அவருடைய தந்தை யாழ். பொலிஸில் புகார் செய்துள்ளார்.

சுரேஷ்குமாருக்கு 19 வயது. இவர் கடந்த 11ந் திகதி ரியூசனிற்காக யாழ்ப்பாணம் வந்தார். அதன்பின் இவர் வீடு திரும்பவில்லை என்றும், இவரை யாழ்ப்பாணம், அச்சுவேலி ஆகிய இடங்களில் தேடியும் கண்டுபிடிக்க முடியவில்லை என்றும் பொலிஸில் புகார் செய்யப்பட்டுள்ளது.

## செல்லப்பா வடிவேலு

யாழ்ப்பாணம் இலங்கை வங்கிக்கு இம்மாதம் 11ந் தேதி காலையில் பென்சன் பணம் எடுக்க வந்த 60 வயது வயோதிபரான செல்லப்பா வடிவேலு வீடு திரும்பவில்லை என்று 9 பிள்ளைகளுக்குத் தாயான செல்லம்மா அறிவித்துள்ளார்.

வட்டுக்கோட்டை அராலி வடக்கைச் சேர்ந்த என் கணவர் செல்லப்பா வடிவேலு இம்மாதம் 11ம் தேதி காலை 7 மணிக்கு சைக்கிளில் யாழ்ப்பாணம் இலங்கை வங்கிக்கு பென்சன் பெறுவதற்காக சென்றார்.

அவர் போகும்போது சேமிப்பு வங்கி புத்தகம், 2,750 ரூபா பெறுமதியான ஒரு தங்கப்பவுண் மோதிரம், 8 350 ரூபா ரொக்கப்பணம் 600 ரூபா பெறுமதியான கைக்கடிகாரம் தேசிய அடையாள அட்டை ஆகியவற்றுடன் சென்றார்.

அவர் இதுவரை வீடு திரும்பவில்லை. என் கணவனைப்பற்றி அறிந்துகொள்வதற்காக என் வீடு தேடிவந்த உறவினர், அயலவர்கள் அவர் கொண்டு சென்றிருந்த வங்கி சேமிப்புப் புத்தகத்தை கொண்டு வந்து தந்தனர். அந்த சேமிப்புப் புத்தகம் எரிந்த நிலையில் உள்ளது. எனது கணவர் பென்சன் பணத்தை எடுத்துக் கொண்டாரா தெரியவில்லை. அவர் இன்னும் வீடு திரும்பவில்லை.

## சாமான் வாங்கச் சென்றவர்

யாழ்ப்பாணம் அத்தியடி வீதியைச் சேர்ந்த 24 வயது இராசலிங்கம் நகுலேஸ்வரன், கடந்த 10ம் திகதி காலை 10 மணியளவில் கடையில் சாமான் வாங்குவதற்காகச் சென்றவர் இன்னமும் வீடு திரும்பவில்லை என்று அவரது தகப்பன் சி. இராசலிங்கம் அறிவித்துள்ளார்.

## வரப்பெற்றோம்

தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்கா தேவி தேவஸ்தான இரத்தாக்ஷி வருஷ பிரதான உற்சவங்கள் பற்றிய பிரசுரமும், இவ்வாலய நிர்வாகசபை அறிக்கையும் வரவு-செலவுக் கணக்கு விபரமும் என்னும் பிரசுரமும் வரப்பெற்றோம்.

உற்சவங்கள் தொடர்பான பிரசுரத்தில் 85ம் ஆண்டு ஏப்ரல் 9ம் திகதி வரையிலான திருவிழாக்கள் பற்றிய விபரங்கள் அடங்கியுள்ளது.

நிர்வாகசபை ஆண்டறிக்கை இவ்வாலயத்தின் வரந்துபட்ட செயல்களையும் நோக்கங்களையும் நன்கு பிரதிபலிக்கின்றது.

வரவு-செலவுக் கணக்குகள் ஆலய நிர்வாகத்தின் ஒளிவு மறைவற்ற தன்மையையும், ஆலயத்தின் வருமானம், நிரந்தரச் சொத்து, இவற்றின் பயன்பாடு ஆகியவற்றையும் அறியத்தருகிறது. [ப]

# பரீட்சையில் தோல்வி மாணவன் தற்கொலை

(கிளிநொச்சி)

பரீட்சையில் சித்தியடையாததால் கவலையும் விரக்தியும் உற்றுக்காணப்பட்ட 18 வயது பாடசாலை மாணவன் நஞ்சருந்தி மரணமானார்.

வட்டக்கச்சியில் வசித்து வந்த கிருஷ்ணபிள்ளை தர்மரத்தினம் என்பவரே நச்சுத் திராவகம் அருந்தி இவ்வாறு மரணமானவராவர்.

இம்மரணம் தொடர்பான மரணவிசாரணையை கிளிநொச்சிப் பகுதி திடீர்மரண விசாரணை அதிகாரி மு. யோகலிங்கம் மேற்கொண்டார். சாட்சியை கிளிநொச்சி ஆஸ்பத்திரி பொலிஸ் பிரிவைச் சேர்ந்த ஏ. இராமசாமி ஆஜர் செய்தார். சடலப் பரிசோதனையை சட்ட வைத்திய அதிகாரி திருமதி தேவதாசன் நடத்தினார்.

மரணமான மாணவன் தர்மரத்தினத்தின் சிறிய தாய் எஸ். இலக்ஷ்மி சாட்சியமளிக்கையில் கூறியதாவது:-

"மரணமான தர்மரத்தினம் எனது சகோதரியின் மகனுவார். எனது பராமரிப்பில் இருந்துவந்த இவர் அண்மையில் வெளிவந்த க. பொ. த. சாதாரண பரீட்சையில் சித்தியடையாததால் கவலையும் விரக்தியும் அடைந்து காணப்பட்டார்.

"சம்பவதினம் சாப்பாடு கொடுக்க அவர் இருக்கும் அறைக்குச் சென்றபோது அங்கு அவர் இருக்கவில்லை. பின்னர் பல இடங்களிலும் தேடுதல் நடத்தி இறுதியில் உடலைப் பிணமாக வயலில் இருந்து மீட்டோம்" என்றார்.

தற்கொலை என மரணவிசாரணை அதிகாரி திரு யோகலிங்கம் தீர்ப்பு வழங்கினார்.

# பங்கீட்டு அட்டைக்கு மண்ணெண்ணெ

(பண்டத்தரிப்பு)

பண்டத்தரிப்பு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் மண்ணெண்ணெயைப் பங்கீட்டு அட்டைக்கு அரை லீட்டர் வீதம் இப்பகுதி மக்களுக்கு இவ்வாரம் வழங்கி வருகின்றது.

இப்பகுதியில் மண்ணெண்ணெக்கு ஏற்பட்டுள்ள தட்டுப்பாட்டினால் விவசாயிகள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

# தென்னைச் செய்கையை ஊக்குவிக்க முயற்சி

(வண்ணார்பண்ணை)

யாழ்ப்பாண மாவட்டத்தில் தென்னைச் செய்கையை ஊக்குவிப்பதற்கு தென்னைப் பயிர் செய்கையாளர் மன்றமொன்றை யாழ்ப்பாண மாவட்டத்தில் அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.

தென்னை ஆராய்ச்சிச்சபையின் பதவிநிலை ஆராய்ச்சிப் பிரிவு பொறுப்பதிகாரி கலாநிதி எஸ். மோகனதாஸ் இதற்கான ஆலோசனைகளைச் செய்து வருகின்றார்.

இதன் தொடர்பாக தென்னைப்பயிர்ச்செய்கையாளர்களைக் கொண்ட ஆலோசனைக் கூட்டமொன்று விரைவில் நடைபெறவிருக்கிறது.

# குளத்தில் விழுந்த குழந்தையை காப்பாற்றச்சென்ற தாய் மரணம்

(கிளிநொச்சி)

குளத்தில் விழுந்த தனது குழந்தையைக்காப்பாற்ற நீரில் மூழ்கிய தாய் மூச்சுத்திணறி மரணமானார்.

இக்குழந்தையைக் காப்பாற்ற போராடிய மற்றுமோர் பெண்ணையும் குழந்தையையும் குளத்தில் மீன்பிடித்துக் கொண்டிருந்த மீனவரொருவர் காப்பாற்றினார்.

கிளிநொச்சி புதுக்குளம் பகுதியில் வசித்துவந்த சுப்பிரமணியம் ராசம்மா [30 வயது] என்பவரே இவ்வாறு மரணமானவராவார்.

இம்மரணம் சம்பந்தமான விசாரணையை கிளிநொச்சிப் பகுதி மரண விசாரணை அதிகாரி முருகேசு யோகலிங்கம் மேற்கொண்டார். சாட்சியை கிளிநொச்சி பொலிஸ்நிலையத்தைச் சேர்ந்த ஏ. இராமசாமி ஆஜர் செய்தார். சடல பரிசோதனையை சட்ட வைத்திய அதிகாரி திருமதி தேவதாசன் மேற்கொண்டார்.

மரணமான ராசம்மாவின் சகோதரி எஸ். வசந்தாதேவி சாட்சியமளிக்கையில்:

"சம்பவதினம் நானும் எனது மரணமான அக்காவும் அவரது குழந்தையுடன் புதுக்குளத்திற்கு குளிக்கச் சென்றோம். குழந்தையை குளக்கட்டில் இருத்திவிட்டு நானும் அக்காவும் குளத்தில் இறங்கிக் குளித்தோம்.

"திடீரென குளக்கட்டில் இருந்த குழந்தை குளத்தில்

(8-ம் பக்கம் பார்க்க)

# தற்கொலை!

(மாவிட்டபுரம்)

சாப்பாடு சரியில்லையென கணவர் கண்டித்ததால் மனமுடைந்த மனைவி நஞ்சருந்தி தற்கொலை புரிந்தார்.

விளக்காமம் என்னுமிடத்தைச் சேர்ந்த விமலசிங்கம் பரஞ்சோதி (62 வயது) என்னும் பெண்மணியே இவ்வாறு மரணமானவராவார்.

சாப்பாடு சரியாக அமையாமைக்காக கோபம் கொண்டு காலமானவரைக் கண்டித்த கணவர் பின்னர் தோட்டத்திற்குச்சென்று திரும்பிய சமயம் காலமானவர் நஞ்சருந்திய நிலையில் காணப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது.

மரண விசாரணை நடத்திய திடீர் மரண விசாரணை அதிகாரி திரு. நா. தம்பிராசா தற்கொலை எனத் தீர்ப்பளித்தார்.

# சீரும் சிறப்புடன் சேவைசெய்தவர் அமரர் செல்லத்தம்பு

தேசிய சேவையில் புகழ் பெற்ற பெரியார்களின் முன்னணியில் நின்றவர்களில் சிறப்புடைய ஒருவராக விளங்கியவர் காலஞ்சென்ற பெரியார் திரு. எஸ். எம். செல்லத்தம்பு அவர்கள். சம்பத்திரிசியார் பாடசாலையில் கல்வி பயின்று பல பரீட்சைகளிற் சித்தியெய்தினார். பகுதி இறைவரி உத்தியோக பரீட்சையில் வெற்றிபெற்று இறைவரி உத்தியோகத்தராகவும், உதவி அரசாங்க அதிபராகவும் அரும்பணிகள் புரிந்தார். பொதுமக்களோடு மதிப்புடன் பழகி, பொறுப்புணர்ச்சியை வளர்த்து, சமயத்தன்மையை உணர்த்தி, இன்னல்களை எதிர்த்துப் பணிபுரிந்தார். வெள்ளத்தினுல், புயலினுல், பட்டினியால் மக்கள் இன்னலுற்றபோது மிகவும் கனிந்து பெருந்தன்மையோடும் பணியாற்றிச் செயற்கரிய சேவை செய்தவர் செல்லத்தம்பு.

அவருடைய சேவையை நன்குணர்ந்த அன்றைய அரசாங்கம் பதவி முன்னேற்றம் வழங்கி, இரத்தினபுரியில் மேலதிக அரசாங்க அதிபராகப் பதவியேற்று விளங்கிய பொழுது அவரைப் போலவே பாராட்டும் போற்றும் புகழும் பெற்ற பொதுமக்கள், அரசாங்க உத்தியோகத்தர்களைப் போலன்றி, திரு. செல்லத்தம்பு அவர்கள் தெற்றியின் விளக்கமாக நிலைத்திருக்கின்றார். புகழ் அவரை நாடி புகழை எதிர்த்துப் புரட்சி செய்த பெருமை அவருக்குரியது.

திரு. செல்லத்தம்பு எதிர்த்தால் வெளிவெளியாக எதிர்ப்பார். போற்றினுல் வெளிவெளியாகப் போற்றுவார். உள்ளொன்று வைத்துப் புறம் பொன்று பேசியதில்லை. மற்றவர்களுடைய தப்புக்களைப் பயன்படுத்தி பணம் வைத்து அவர் ஒருகாலமும் ஆதாயம் தேடவில்லை. ஏற்றவர்களின் இன்னல்களைத் தன் தலையில் சுமப்பார். தன்னுடன் வேலை செய்பவர்களுக்கு, பல வேளைகளில் உணவு கொடுத்து, தேவைப்பேற்றின் தன்னுடைய காரிலேயே கூட்டிச்சென்று பணிபாக நடத்தினமை அவருடைய தனிப்பெரும் சற்குணம்.

எங்களுடைய சேவைகளை நாம் எடை போடுவதிலும் பார்க்க, இறைவன் கணக்கும் போடுவதில் வல்லவன். மேலதிக அரசாங்க அதிபராயிருந்த செல்லத்தம்புவின் தமிழ்பற்றும் செயற்கரிய சேவைத்திறனும் அழியாப்புகழ் கொடுக்கும் அரசியல்வானுக்கு அவரை அழைத்தது.

தமிழரசுக் கட்சியின் முக்கியஸ்தர்களின் ஒருவராய், வவுனியாப் பாராளுமன்ற உறுப்பினராய், பின்னர் தமிழர் ஐக்கிய முன்னணியின் ஸ்தாபகர்களின் முக்கியமானவராய், முல்லைத்தீவின் பாராளுமன்ற உறுப்பினராய் விளங்கிய பெருமை செல்லத்தம்புவுக்கே உரித்தானதாகும்.

மக்களுடன் மக்களாய், தலைவர்களுடன் தலைவராய், பரிபாலனர்களுடன் ஒரு பரிபாலனாய் பணியாற்றிய ஒப்பற்ற தலைவர் இறைவனடி சேர்ந்தார்.

க. இரத்தினசிங்கம்
சுழிபுரம்.

## பஞ்சாப்பில்

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

திய ரிசேர்வ் பொலிஸ் படையினரே இந்துமபாக்கிய பிரயோகத்தைச் செய்தனர்.

தற்போது பிரோஸ்பூர் பகுதியில் ஊரடங்குச் சட்டம் அமுலில் உள்ளது. (வி)

## இருவரை...

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

இவர்களையே கொல்லுமாறு இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் அரசாங்கத்தை கோரி நிற்கிறது என்றும் தீர்மானத்தை செயலாளர் திரு. கனகசபாபதி தெரிவித்தார்.


## யாழ்ப்பாண ஐக்கிய வியாபாரச் சங்கம்

சம்பந்தப்பட்ட சகலருக்கும்

# அறிவித்தல்

யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரி வீதியில்
420ம் இலக்கத்தில் அமைந்திருந்த
எங்கள் தலைமைக் காரியாலயமும்
ஏனைய பகுதிகளும் 1984 ஏப்ரில் 9 ந் திகதி
தீயினுல் எரிக்கப்பட்டதென்பதை
எங்கள் ஆதரவாளர்கள், வாடிக்கையாளர்,
கடன் கொடுத்தோர், கடன் பட்டோர்,
பணம் வைப்புச் செய்தோருக்கும், ஏனையோருக்கும்
கவலையுடன் அறியத்தருகின்றோம்.
எங்கள் கொடுக்கல்வாங்கல்களும், வருமதியுள்ள பதிவேடுகளை
பூரணமாக்குவதற்கு ஏதுவாக கடன் கொடுத்தோர்,
கடன்பட்டோர், பணம் வைப்பிலிட்டோர் அனைவரும்
பற்றுச்சீட்டுகள், சான்றிதழ்கள்,
பற்று வரவேடுகள், மாதாந்த கணக்கு கூற்றுக்கள்
போன்ற ஆவணச் சான்றுகளை
1984 ஏப்பிரல் 30-ந் திகதி தொடக்கம்
மே 16-ந் திகதி வரை
காலை 9-00 மணி தொடக்கம் நண்பகல் 12-00மணிக்குள்
உள்ள காலப் பகுதிக்குள் எங்கள் செயலாளருக்கு
எமது மோட்டார் பகுதியில்
நேர்முகமாகவோ அல்லது பிரதிநிதி மூலமாகவோ
பரிசீலனைக்கு சமர்ப்பிக்குமாறு
தயவாகக் கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.
சமர்ப்பிக்கப்படும் ஆவணங்கள் உடனடியாக பதியப்பட்டு
திருப்பித் தரப்படும்.
தங்கள் ஒத்துழைப்புக்கு நன்றி.

செ. சிவஞானம்,
நிர்வாக அதிபர்.

420, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
25-04-84.

(1989)



★ ஸ்பெயின் ★ இத்தாலி ★ பிரான்ஸ்
★ சுவிற்சலாந்து ★ கனடா
சகாய விலையில் ரிக்கட்டுகளுக்கும்
பிரயாண ஒழுங்குகளுக்கும்

**AIR-TRANSIT**

TRAVEL CONSULTANTS

99-2/56 B, கபூர் பில்டிங்
கொள்ளுப்பிட்டி, கொழும்பு-1.

538 B, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
போன்: 22669


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

RECEIVED 2 ... 1984 PERIODICALS DIVISION UNIVERSITY OF JAFFNA SRI LANKA

# யாழ். வங்கிகள் நேரக்குறைப்பினல் வாடிக்கையாளர் பாதிப்பு!

(யாழ்ப்பாணம்)

யாழ் நகரிலுள்ள வங்கிகளில் குறிப்பிட்ட நேரம் மட்டுமே வேலை நடைபெறுவதால், பெருந்திரளான வாடிக்கையாளர்கள் வங்கிக்கு வெளியில் தினமும் திரண்டு நிற்கிருர்கள்.

சில வங்கிகளில் வாசலைக் கதவு எதுவும் உள்ளே செல்ல அனுமதிக்கப்படுவதில்லை. வாடிக்கையாளர்களும் ஒருவர், ஒருவராகவே உள்ளே செல்ல அனுமதிக்கப்படுகின்றுர்கள்.

கடந்த இரு தினங்கள் ஆசிரியர் சம்பளங்கள் காசோலைகளாக வழங்கப்பட்டது. இக் காசோலையை வழங்குவதற்கு நீண்டநேரம் காத்துநின்று பெரும் சிரமப்படுவதாக ஆசிரியர் ஒருவர் தெரிவித்தார்.

யாழ் நகரில் ஒரு வங்கியில் மட்டுமே காசோலையை நேரடியாக மாற்றக்கூடியதாக இருப்பதாகவும் அவர் தெரிவித்தார். (இ)



1983ம் ஆண்டுக் கல்லூராட்சி அமைச்சு நிறைவேற்றிய திட்டங்கள் மற்றும் முக்கிய நடவடிக்கைகள் பற்றிய புகைப்படங்களுடன் நூல் ஒன்று வெளியிடப்பட்டுள்ளது. இந்நூலின் பிரதியை அமைச்சர் கே. டபிள்யூ தேவநாயகம் ஜனாதிபதி ஜே. ஆர். ஜயவர்த்தனவுக்கு கையளிப்பதைப் படத்தில் காணலாம். அருகில் உள்ளூராட்சி அமைச்சுச்செயலாளர் திரு. சிறிலி கமகே காணப்படுகிருர். (இ)

## குளத்தில்

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

விழ்ந்துவிட்டது. நான் கூக்குரலிட்டேன். அக்கரையில் அருகில் குளித்துக்கொண்டிருந்த தெய்வானை என்பவரும் நீரில் மூழ்கி குழந்தையைக் காப்பாற்ற முயன்றனர்.

"இவர்கள் இருவரும் குழந்தையைக் காப்பாற்ற முடியாமல் நீரில் அமிழ்படுவதைக் கண்ட நான் குளத்தில் மீன் பிடித்துக்கொண்டிருந்த தங்கவேலு என்பவரை அழைத்து இவர்களைக் காப்பாற்றுமாறு கேட்டுக்கொண்டேன்.

"அவர் நீரில் நீந்துடன் போராடி எல்லோரையும் கரை சேர்த்தார் ஆனால் அக்கா இறந்த நிலையிலேயே மீட்கப்பட்டார் பின்னர் குழந்தையையும், தெய்வானையையும் ஆஸ்பத்திரியில் சிகிச்சைக்காக அனுமதித்தோம்" என்றுர்.

விபத்து மரணம் என மரண விசாரணை அதிகாரி தீர்ப்பு வழங்கினுர்.

## இளைஞர் சுடப்பட்டார்

(வவுனியா நிருபர் ரி விவேகராசா)

வவுனியா - மன்னார் வீதியில் வவுனியாவிலிருந்து அரை மைல் தூரத்திலுள்ள குருமன்காடு என்னுமிடத்தைச் சேர்ந்த நடராஜா ஸ்ரீஸ்கந்தராஜா (22வயது) என்பவர் இனந்தெரியாத நபர்களால் சுடப்பட்டு அநுராதபுரம் மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இச்சம்பவம் பற்றிக் கூறப்படுவதாவது:-

கடந்த திங்கட்கிழமை இரவு பிரஸ்தாப நபர் வீட்டிலிருந்த வேளை, வெளியில் யாரோ கூப்பிடுவதாக இவரது தந்தையார் எழுப்பிவிட்டாராம் இதனைத் தொடர்ந்து இவர் வெளியே சென்றபோது இனந்தெரியாத நபர்கள் இவரைச் சுட்டுவிட்டு ஓடிவிட்டனராம்.

இவரது வலது நெஞ்சில் காயம் ஏற்பட்டுள்ளது. வவுனியா ஆஸ்பத்திரிக்குக் கொண்டுசெல்லப்பட்ட இவர் தற்பொழுது அநுராதபுரம் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

## கோஷ்டி மோதல் ஒருவர் பலி

(வவுனியா)

கள்ளம் சம்பந்தமாக நடைபெற்ற கோஷ்டி மோதலில் முதியவர் ஒருவர் பலியானுர்.

முல்லைத்தீவு நாயாற்றில் உள்ள மீன்வாடியில் இச்சம்பவம் இடம்பெற்றது.

ஜூதர் பெர்ணாண்டோ (50 வயது) என்பவரே பலியானவர் ஆவர். இவருடன் இரண்டு பேர் காயமுற்று முல்லைத்தீவு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

# வான் மோதி வயோதிபர் பலி!

(கிளிநொச்சி)

வீதியால் சென்றவரை வேகமாகவந்த வான் மோதியதால் ஸ்தலத்திலேயே வானினுல் மோதுண்ட வயோதிபர் மரணமானுர்.

கிளிநொச்சி பஸ்நிலையத்திற்கு அருகில் இச்சம்பவம் இடம்பெற்றது. வானினுல் மோதுப்பட்டு மரணமானவர் கிளிநொச்சி சந்தை வர்த்தகநிலை சொந்தக்கார் கிப்ஸந்தியான ஆர் சந்தைய (58 வயது) என்பவராவார்.

இம் மரணம் தொடர்பான விசாரணையை கிளிநொச்சி பதில் நீதவான் திரு. வி. எஸ். சந்திரலிங்கம் மேற்கொண்டார். சாட்சிகளை பொலிஸ் இன்ஸ்பெக்டர் வி. ஏ. சுகததாசவும், சார்ஜன்ட் எம். கணேசதுரையும் ஆஜர்செய்தனர்.

வான் சாரதி அபிமன்னன் செல்வகுமாரை ஐயாயிரம் ரூபா பிணையில் செல்லுமாறு பதில் நீதவான் உத்தரவிட்டார்.

சுப்பிரமணியம் விஜயகுமார், வின்சென்ட் ஜெயராசா ஆகியோரும் சாட்சியமளித்ததைத் தொடர்ந்து விபத்து மரணமெனத் தீர்ப்பு வழங்கப்பட்டது.

## மரண அறிவித்தல்
### கதிரிப்பிள்ளை கந்தசாமி

உடுப்பிட்டியைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் கொக்குவில் வாசியுமாகிய கதிரிப்பிள்ளை கந்தசாமி அவர்கள் காலமாகிவிட்டார் இவர் காலஞ்சென்ற கதிரிப்பிள்ளை, பார்வதிப்பிள்ளை தம்பதிகளின் சிரேஷ்ட புத்திரனும், பூரணியின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற [illegible] பாக்கியம் ஆகியோரின் மருமகனும் செல்லையாவேல் (லெபனுன்), அருள்வேல் (மேற்கு ஜேர்மனி), வீரலோஜினி, பத்மலோஜினி, சக்திவேல் கதிர்வேல் (இந்தியா), சந்திரகுமார் ஆகியோரின் அன்புத் தந்தையும், திருமதி [illegible] அருள்வேல், தவக்குமார் ஆகியோரின் அன்பு மாமனுரும், காலஞ்சென்ற பூரணி இராசதுரை வீரசிங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஆவார். அன்னாரது பூதவுடல் கொக்குவில் கிழக்கு காவேலடி ஒழுங்கை இல்லத்தில் இருந்து 25-4-84 (இன்று பி. ப. 2.00 மணிக்கு தகனக்கிரியைகளுக்காக கொக்குவில் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இதனை உற்றூர், உறவினர் நண்பர்கள் யாவரும் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்கிருேம்.

1995

## மரண அறிவித்தல்
### திருமதி தனலக்ஷ்மி மூர்த்தி

உடுவிலைச் சேர்ந்த தனலக்ஷ்மி நேற்று (24-4-84) காலமானுர் இவர் டாக்டர் மூர்த்தி (அரசினர் வைத்தியசாலை) அவர்களின் அன்பு மனைவியும், யோகேந்திரன் (கனடா), கேதீஸ்வரி (யாழ் மருத்துவ பீடம்), ஜெகதீஸ்வரி, பாலேந்திரன், கிருஷ்ணவேணி ஆகியோரின் அருமைத் தாயாரும்; கீதா (கனடா), சக்திவேல் (லண்டன்) ஆகியோரின் மாமியும்; ஆலாலசுந்தரம், திலகவதி, காலஞ்சென்ற நடேசபிள்ளை சச்சிதானந்தன், தங்கராஜா (சுகாதார பரிசோதகர் முல்லைத்தீவு) ஆகியோரின் அன்புச் சகோதரியும்; சரவணமுத்து, காலஞ்சென்ற சிவஞானம், காலஞ்சென்ற ஞானமணி, தம்பிப்பிள்ளை, சாந்தாதேவி ஆகியோரின் மைத்துனியும் ஆவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் அன்னாரின் இல்லத்தில் (சண்டிலிப்பாய் உடுவில்) இன்று (25-4-84) புதன்கிழமை காலை 9 மணிக்கு நடைபெற்று தகனக் கிரியைகளுக்காக பிப்பிலி மயானம் மானிப்பாய்க்கு எடுத்துச்செல்லப்படும்.

இப்படிக்கு
டாக்டர் மூர்த்தி

1994

## எழுதுவினைஞர்கள் நியமனம்

(பண்டத்தரிப்பு)

யாழ் சுகாதார சேவை கண்காணிப்பாளர் அலுவலகத்திற்கு ஐந்து எழுதுவினைஞர்கள் இம்மாதம் தொடக்கம் கொழும்பிலுள்ள சுகாதார அமைச்சினுல் நியமிக்கப்பட்டுள்ளனர். இதன் மூலம் இந்த அலுவலகத்தில் நிலவிவந்த எழுதுவினைஞர்களுக்கான தட்டுப்பாடு ஓரளவு குறைந்து விட்டது.

எழுதுவினைஞர்களுக்கான நியமனக் கடிதங்கள் யாவும் தனிச்சிங்கள மொழியில் வழங்கப்பட்டுள்ளது.

## சுருவில் அணைக்கட்டு திருத்தப்படுகிறது

(கண்ணுர்பண்ணை)

தேசியசேவைத் திட்டத்தின் கீழ் கமநலசேவைத்துறை சுருவில் குளக்குக்கடல் அணைக்கட்டு வேலைத்திட்டத்தை யாழ் மாவட்ட தேசிய இளைஞர் சேவை மன்றம் ஆரம்பித்துள்ளது.

இருமாதகால வேலைத்திட்டத்தின் கீழ் ஆரம்பிக்கப்பட்ட இக் கட்டத்தை கமநலத்துறை உதவி அரசாங்கஅதிபர் திரு ஏ. செந்தில்வடிவேல் அண்மையில் ஆரம்பித்து வைத்தார் இளைஞர்சேவை அதிகாரி திரு வே. முருகையா இதை மேற்பார்வைசெய்து வருகின்றுர்.

## கல்முனைக் கொள்ளை: 2 வாலிபர்கள் கைது

(கல்முனை)

கல்முனை மத்திய மகாவித்தியாலய ஆசிரியர்களின் சம்பளப் பணம் கொள்ளை சம்பந்தமாக கல்முனைப் பொலிஸார் இரு வாலிபர்களை சந்தேகத்தின் பேரில் கைது செய்துள்ளனர்.

நேற்று முன்தினம் இந்த மகாவித்தியாலயத்தில் ரூபா 11,496 கொள்ளையடிக்கப்பட்டது.

இக் கொள்ளைச் சம்பவம் தொடர்பாக இருவாலிபர்களை கல்முனை பொலிஸார் தேடி வந்தனர்.

## யாழ். ஐ.வி...

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

யும் வழமைபோல் விற்பனை நடைபெற்றுவருவதாகவும் அவர் தெரிவித்தார்.

சகல ஏஜண்டுகளுக்கும் வழங்கப்படும் பொருள்கள் வழமைபோல் விநியோகிக்கப்பட்டு வருவதாகவும், புதிதாக பொருள்கள் வந்து சேர்ந்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

சுமார் 2 வாரகாலம் வாடிக்கையாளர்கள் பாதிப்படைந்த போதிலும், கடந்த திங்கட்கிழமைமுதல் வழமைபோல் வியாபாரம் நடைபெற்றுவருவதாகவும் அவர் தெரிவித்தார்.

மருந்தகப்பகுதி, ஆஸ்பத்திரி வீதியில் வேறு ஒரு இடத்திற்கு மாற்றப்பட்டுள்ளதாகவும் பல பகுதிகள் ஆஸ்பத்திரி வீதியிலுள்ள பிரதான களஞ்சியத்தில் இயங்கிவருவதாகவும் தெரிவித்தார்

சங்கத்தின் பொதுகாரியாலயமும் மொத்த விற்பனைப்பகுதியும் கோப்பாய் விற்பனைப் பகுதி பஸ்நிலையத்திற்கு அருகிலுள்ள பழைய மோட்டார் பகுதியில் இயங்கிவருவதாகவும் அவர் தெரிவித்தார். (ச)

## தீவிரவாதி..

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

களையும் சேர்ந்த செய்தியாளர்கள் ஆர்வத்துடன் வினவியபோது "சந்தித்தேன்" என்று மட்டுமே பதிலளித்தார். கருத்து எதுவும்வெளியிட மறுத்துவிட்டார்

"ஓர் நல்ல சூழ்நிலையை ஏற்படுத்த முயற்சிக்கின்றேன். அவசரப்பட்டு எதையும் எழுதிவிடாதீர்கள்" என்று தமிழக முதல்வர் கேட்டுக்கொண்டார்.

## பார்சல்குண்டு...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இக்குண்டுவெடிப்புச் சம்பவத்தில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த ஐவர் பலியானது தெரிந்ததே.

இராணுவத்தின் 'கமாண்டோ' பிரிவைச் சேர்ந்த மூன்று இராணுவ வீரர்களும், ஒரு கார்ச் சாரதியும் கைது செய்யப்பட்டுள்ளனர். இராணுவத்தினர் மூவரும் கொழும்பு பொலிஸ் நிலையங்களில் காவலில் வைக்கப்பட்டுள்ளனர்.

இப் பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 63ம் இலக்க அச்சகத்தில் 1984ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 25ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a News paper at the G. P. O. post office Sri Lanka under number, B 100236/81 Eelanadu P. O. Box 49, Telegram: Eelanadu, Telephone: 22389 — 24126.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org